# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 2087/28 - 2018 සැප්තැම්බර් මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.09.06

*2087/28 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**காணி கொள்ளல் சட்டம் (அத்தியாயம் 460)**

49அ ஆம் பிரிவின் கீழான கட்டளை

அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் காணி கொள்ளல் சட்டத்தின் 49அ ஆம் பிரிவினால் (அத்தியாயம் 460) எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திறமைகள் அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதன்கண்ணுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள காணி 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஓர் அரசாங்கக் கூட்டுத்தாபனமாகிய இலங்கை முதலீட்டுச் சபைக்குத் தேவைப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

மலிக் சமரவிக்ரம,
திறமை அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்.

கொழும்பு,
2018, செத்தெம்பர் 05.

**அட்டவணை**

திரு. ஜே. பி. என். ஜயசுந்தர, பதிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற நில அளவையாளரினால் 2017.10.19 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 14042A ஆம் இலக்கத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட "அலுவின்னேகும்புர" மற்றும் "கெடிஸ்மாத்தா" இன் A காணிப் பகுதியிலிருந்தான காணித்துண்டு, இது 1.6617 ஹெக்டயார் ஆக இருப்பதுடன் (4 ஏக்கர் 0 ரூட் 17 பேர்ச்சஸ்) பரப்பளவுடையதும் மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தின் சியனே கோரளையின் அதிகாரிப்பத்துவின் பியகம பிரதேச செயலாளர் பிரிவின் வல்கமவில் அமைந்துள்ளதுடன் அதன் எல்லைகள் பின்வருமாறு :

**துண்டு இல. அ :-**

வடக்கு : இலங்கை முதலீட்டுச் சபைக் காணி (காணித்துண்டுகள் பி.பி. கம் 116 இல் 83, 81 மற்றும் 80) ;

கிழக்கு : இலங்கை முதலீட்டுச் சபைக் காணி (காணித்துண்டுகள் பி.பி. கம் 116 இல் 81, 80 மற்றும் 79) ;

தெற்கு : பாதை, முதலீட்டுச் சபைக் காணி (காணித்துண்டுகளின்) எஞ்சிய பகுதி பி. பி. கம் 116 இல் 85 மற்றும் 84) மற்றும் வரையறுத்த தனியார் டைனா வொஸ் இன் காணி) ;

மேற்கு : இலங்கை முதலீட்டுச் சபைக் காணி, காணித்துண்டுகளின் எஞ்சிய பகுதி பி. பி. கம் 116 இல் 85, 84) மற்றும் திட்ட இல. 14042 இல் காணித்துண்டு பீ மற்றும் வரையறுத்த டைனா வொஸ் நிறுவனத்தின் காணி

விஸ்தீரணம் : 1.6617 ஹெக்டயர் (4 ஏக்கர் 0 ரூட் 17.00 பேர்ச்சஸ்)

09-512